மலர்ந்து உதிரும் பூக்கள் அல்ல

▶ படத்தில் பார்ப்பது மலர்ந்து உதிரும் பூக்கள் அல்ல. நிரந்தரமற்ற உலக வாழ்க்கையில் ஒருநாள் மட்டுமே சந்தோஷமாக வாழ்ந்து முடிக்கும் ஈசல்கள் தான். மின் விளக்கு ஒளியை பார்த்ததும் மகிழ்ச்சியுடன் திரண்டு வட்டமிட்டபடி பறக்கும் ஈசல்களின் அழகிய காட்சி. இடம்: வேலூர் கலெக்டர் அலுவலகம்

டிட்வா புயல் கனமழையை எதிர்கொண்டு

பொதுமக்களுக்கு உதவிட திமுகவினர் தயார் நிலையில் இருக்க வேண்டும்

முதல்வர் வேண்டுகோள்

சென்னை, நவ.29: முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்ட அறிக்கை:

டிட்வா புயல் எதிர்கொள்ள அரசின் சார்பில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அரசு இயந்திரம் முடுக்கிவிடப்பட்டுள்ளது. அதோடு மாவட்டங்களுக்கான பொறுப்பு அமைச்சர்கள், மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறை கண்காணிப்பாளர்கள் உள்ளிட்டோருக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் உரிய அறிவுரைகளும் வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டுள்ளன.

மழையை எதிர்கொள்ள அரசாங்கம் முழு அளவில் தயாராக உள்ளது என்றாலும், ஒருவேளை இயற்கை வழக்கத்திற்கு மாறாகப் பெருமழைப்பொழிவை ஏற்படுத்தினாலும் சரியான முன்னெச்சரிக்கையுடன் பதற்றமில்லாமல் மழைக் காலத்தை எதிர்கொள்வோம். பாதிக்கப்படும் மக்களுக்கு உதவிடும் வகையில் திமுகவும் களத்தில் துணையாக நிற்க வேண்டும் என திமுக உடன்பிறப்புகள் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக - ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட மற்றும் கிளை செயலாளர்களை தயார் நிலையில் இருக்கும்படி காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை, வேலூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, தஞ்சை, நாகை, திருவாரூர், புதுக்கோட்டை, மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட செயலாளர்கள் அறிவுறுத்த வேண்டும். கவுன்சிலர்கள் தங்கள் வார்டுகளிலேயே முழுமையாக இருந்து மக்களுக்கு உதவிட வேண்டும். மழைக்காலத்தில் திமுகவினர், பொதுமக்கள் - தன்னார்வலர்களுடன் இணைந்து பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களான அரிசி, பருப்பு, எண்ணெய் உள்ளிட்ட பொருட்களை வாங்கித் தருவதற்கான முன்னேற்பாடுகளைச் செய்து வைத்துக் கொள்வது அவசியம்.

குடிநீர், பால் ஆகிய இரண்டும் மிக அவசியமான தேவையாக இருக்கும். எனவே தங்கள் பகுதிகளில் அவை தடையின்றி கிடைக்கின்றனவா என்பதை கண்காணித்து, தேவையான ஏற்பாடுகளை செய்து தரவும், ஆங்காங்கே நடைபெறும் மீட்பு பணிகளிலும் உதவிடவேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். மழைக்காலத்தை எதிர்கொள்ளவும் - பாதிக்கப்படும் மக்களுக்கு உதவிடும் வகையிலும் திமுக களத்தில் முழுமூச்சுடன் துணையாக நிற்க வேண்டும் என திமுக உடன்பிறப்புகளையும், நிர்வாகிகளையும் கேட்டுக் கொள்கிறேன்.

காதலன் மீது புகார் அளிக்க வந்த பெண் இன்ஜினியரை உல்லாசத்திற்கு அழைத்த

விருகம்பாக்கம் உதவி கமிஷனர் பாலகிருஷ்ண பிரபு காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றம்

சென்னை, நவ.29: திருமணம் செய்வதாக உல்லாசமாக இருந்து ஏமாற்றிய காதலன் மீது புகார் அளிக்க வந்த இளம் இன்ஜினியரை வாட்ஸ்அப் மூலம் உல்லாசத்திற்கு அழைத்து பாலியல் தொந்தரவு செய்ததாக விருகம்பாக்கம் உதவி கமிஷனர் பாலகிருஷ்ண பிரபு மற்றும் பெண் எஸ்ஐ ஆகியோரை கமிஷனர் அருண் அதிரடியாக காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றி உத்தரவிட்டுள்ளார்.

▶ பாலகிருஷ்ண பிரபு, பெனசீர் பேகம்

பல லட்சத்திற்கு ஆன்லைனில் பொருட்கள் வாங்கி ஏமாற்றிய பெண் எஸ்ஐயும் சிக்கினார்

> நீ அழகாக இருக்கிறாய்.... உன்னை பார்த்ததில் இருந்தே என்னால் வேலையில் கவனம் செலத்த முடியவில்லை.... நான் சொல்வதை நீ செய்தால்... நீ சொல்வதை நான் செய்கிறேன்.....

சென்னை சாலிகிராமத்தை சேர்ந்தவர் இந்து (பெயர் மாற்றப்பட்டுள்ளது). மென் பொறியாளரான இவர், கனடா நாட்டில் பொறியாளராக பணியாற்றும் நபரை காதலித்து வந்துள்ளார். அந்த பொறியாளர் சென்னை வந்தபோது, இந்துவுடன் நெருங்கி பழகி வந்துள்ளார். இதனால் இருவரும் பல இடங்களுக்கு சென்று உல்லாசமாக இருந்துள்ளனர். இதற்கிடையே காதலனுக்கு ஏற்கனவே திருமணம் நடந்து மனைவி மற்றும் குழந்தைகள் இருக்கும் சம்பவம் இந்துவுக்கு தெரியவந்தது. இதனால் இருவருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

ஒரு கட்டத்தில் காதலர்கள் இருவரும் ஒன்றாக இருந்த வீடியோவை சமூக வலைத்தளங்களில் வெளியிடுவேன் என கனடா இன்ஜினியர் மிரட்டியுள்ளார். இதனால் அதிர்ச்சியடைந்த இந்து, சம்பவம் குறித்து விருகம்பாக்கம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரை உதவி ஆய்வாளர் பெனசீர் பேகம் விசாரித்தார். அப்போது புகார் அளித்த பெண் பொறியாளருக்கு நியாயம் பெற்று தருவதாக கூறி அவரிடம் உதவி ஆய்வாளர் பெனசீர் பேகம் வீட்டிற்கு தேவையான மளிகை மற்றும் ஆடம்பர பொருட்கள் என பல லட்சம் ரூபாய்க்கு ஆன்லைன் மூலம் பொருட்கள் ஆர்டர் செய்து அதற்கான பணத்தை இந்துவை கட்ட வைத்துள்ளார்.

அதேபோல் புகார் அளித்த பெண்ணிடம் இருந்து காப்பாற்றுவதாக அவரது காதலனிடமும் கைது செய்யாமல் இருப்பதற்காக பல லட்சம் ரூபாய் பணம் வாங்கியுள்ளார். ஒரு கட்டத்தில் இளம்பெண் புகாரின் மீது கைது செய்யாமல் இருக்க காதலனுக்கு நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற உதவி ஆய்வாளர் பெனசீர் பேகம் பல வகையில் உதவி செய்துள்ளார். இதன் மூலம் முன்ஜாமீன் பெற்ற காதலன், சென்னையில் இருந்து கனடா நாட்டிற்கு தப்பி சென்று விட்டார்.

இந்த தகவல் பாதிக்கப்பட்ட இந்துவுக்கு தெரியவந்தது. உடனே விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் பெனசீர் பேகத்திடம் நியாயம் கேட்டுள்ளார். அதற்கு அவர் முறையாக பதில் அளிக்கவில்லை. உடனே பாதிக்கப்பட்ட ராணி இணை கமிஷனர் தீஷா மிட்டலை நேரில் சந்தித்து நடந்த சம்பவம் மற்றும் ஆன்லைன் மூலம் பல லட்சத்திற்கு பொருட்கள் வாங்கியது தொடர்பாக ஆவணங்களுடன் புகார் அளித்தார். புகாரின் மீது விசாரணை நடத்த இணை கமிஷனர் தீஷா மிட்டல் விருகம்பாக்கம் உதவி கமிஷனர் பாலகிருஷ்ண பிரபுவுக்கு உத்தரவிட்டார். அதன்படி பாதிக்கப்பட்ட பெண் பொறியாளர் இந்து, விருகம்பாக்கம் உதவி கமிஷனர் அலுவலகத்தில் பாலகிருஷ்ண பிரபுவை நேரில் சந்தித்து புகார் அளித்தார்.

அப்போது உதவி கமிஷனர், பெண் உதவி ஆய்வாளர் பெனசீர் பேகம் மீது நடவடிக்கை எடுப்பதாக கூறி, பெண் பொறியாளர் இந்துவின் வாட்ஸ் அப் எண்ணிற்கு அடிக்கடி நள்ளிரவில் மெசேஜ் அனுப்பியுள்ளார். அதற்கு பெண் பொறியாளர் இந்துவும் பதில் அளித்துள்ளார்.

அதன் பிறகு அடிக்கடி தனது அலுவலகத்திற்கு விசாரணை என்ற பெயரில் பெண் பொறியாளரை அழைத்து தனது அலுவலகத்தில் உதவி கமிஷனர் பாலகிருஷ்ண பிரபு தன் வசப்படுத்தும் வகையில், இந்துவின் தோள் மீது கையை வைத்து தொட்டு தொந்தரவு செய்துள்ளார். அதேநேரம் புகார் அளித்த உதவி ஆய்வாளர் பெனசீர் பேகம் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதற்கிடையே உதவி கமிஷனர் ஒரு கட்டத்தில் பெண் பொறியாளரின் வாட்ஸ் அப்புக்கு 'நீ அழகாக இருக்கிறாய்.... உன்னை பார்த்ததில் இருந்தே என்னால் வேலையில் கவனம் செலத்த முடியவில்லை.... நான் சொல்வதை நீ செய்தால்... நீ சொல்வதை நான் செய்கிறேன்.....' என்று மிகவும் ஆபாசமாகவும், பாலுணர்வை தூண்டும் வகையிலும் உல்லாசத்திற்கு அழைத்துள்ளார்.

இதை பார்த்த பெண் பொறியாளர் இந்து அதிர்ச்சியடைந்தார். உடனே இணை கமிஷனர் தீஷா மிட்டலை கடந்த 26ம் தேதி நேரில் சந்தித்து, திருமணம் செய்வதாக கூறி ஏமாற்றிய காதலன் மீது நடவடிக்கை எடுக்க கோரி புகார் அளித்தார். பெண் உதவி ஆய்வாளர் வீட்டிற்கு தேவையான பொருட்களை ஆன்லைன் மூலம் ஆர்டர் செய்து பல லட்சம் பணம் பெற்று ஏமாற்றினார். அவர் மீது புகார் அளிக்க விருகம்பாக்கம் உதவி கமிஷனர் பாலகிருஷ்ண பிரபுவிடம் புகார் அளித்ததால், அவர் தன்னை படுக்கைக்கு அழைத்து மெசேஜ் போடுகிறார். நான் என்ன தான் செய்ய வேண்டும் மேடம் என்று அழுது புலம்பியுள்ளார்.

அதை தொடர்ந்து இணை கமிஷனர் தீஷா மிட்டல் புகார் அளித்த இளம்பெண் பொறியாளர் அளித்த வாட்ஸ் அப் மெசேஜ் மற்றும் புகாரை தொடர்ந்து விருகம்பாக்கம் உதவி கமிஷனர் பாலகிருஷ்ண பிரபு மற்றும் பெண் உதவி ஆய்வாளர் பெனசீர் பேகம் ஆகியோர் மீதான புகார் குறித்து போலீஸ் கமிஷனர் அருண் கவனத்துக்கு கொண்டு சென்றார்.

இதை தொடர்ந்து, கமிஷனர் அருண், இருவர் மீதும் துறை ரீதியான விசாரணைக்கு உத்தரவிட்டார். அதன்படி உயர் காவல்துறை அதிகாரிகள் உதவி கமிஷனர் மற்றும் உதவி பெண் ஆய்வாளரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

அதேநேரம், புகார் அளிக்க வந்த இளம் பெண்ணுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த உதவி கமிஷனர் பாலகிருஷ்ண பிரபு மற்றும் புகார் அளிக்கவந்த இளம் பெண்ணிடம் வீட்டிற்கு தேவையான பொருட்களை பல லட்சம் ரூபாய்க்கு ஆன்லைன் மூலம் பெற்ற பெண் உதவி ஆய்வாளர் பெனசீர் பேகம் ஆகியோரை அதிரடியாக காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றி கமிஷனர் அருண் உத்தரவிட்டார்.

இந்த வழக்கில் சிக்கியுள்ள பெண் உதவி ஆய்வாளர் பெனசீர் பேகம் அண்ணாநகர் காவல் நிலையத்தில் பணியாற்றிய போது, சாலையோர வியாபாரிகள் மற்றும் புகார் அளிக்க வந்தவர்களிடம் பணம் பெற்றதாக 5க்கும் மேற்பட்ட புகார்கள் நிலுவையில் இருப்பது குறிப்பிடத்தக்கது. புகார் அளிக்க வந்த இளம்பெண் பொறியாளரிடம் அநாகரிகமாக நடந்த சம்பவம் போலீசாரிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அனுமதி பெறாமல் பாடல்கள் இடம்பெற்ற விவகாரம்

டியூட் படத்தில் இளையராஜாவின் பாடல்களை பயன்படுத்த தடை

சென்னை, நவ. 29: தீபாவளிக்கு வெளியான டியூட் திரைப்படத்தில், தனது 'கருத்த மச்சான்' மற்றும் 'நூறு வருஷம் இந்த மாப்பிள்ளைக்கு' ஆகிய பாடல்களை அனுமதியின்றி பயன்படுத்தியதாக கூறி இசையமைப்பாளர் இளையராஜா சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கு நீதிபதி என்.செந்தில்குமார் முன்பு விசாரணைக்கு வந்தபோது, இளையராஜா தரப்பு மூத்த வழக்கறிஞர் எஸ்.பிரபாகரன், பதிப்புரிமைச் சட்டத்தை மீறும் வகையில் இந்த பாடல்கள் படத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன. படத்திலிருந்து பாடலை நீக்கியும், பாடலுக்கு தடை விதித்தும், இடைக்கால உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

அப்போது டியூட் பட தயாரிப்பு நிறுவனத்தின் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் பாலசுப்பிரமணியன், பாடல்களின் உரிமையை எக்கோ நிறுவனத்திடமிருந்து சோனி நிறுவனம் பெற்றிருந்தது. சோனி நிறுவனத்திடம் இருந்து இந்த பாடல்களை படத்தில் பயன்படுத்துவதற்கான அனுமதியை பெற்றுள்ளோம் என்று குறிப்பிட்டார்.

அதற்கு, இளையராஜா தரப்பில் ஏற்கனவே எக்கோ நிறுவனம் பயன்படுத்த இருநீதிபதிகள் அமர்வு தடை விதித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, அனுமதியில்லாமல் இளையராஜாவின் பாடல்களை டியூட் படத்தில் பயன்படுத்த தடை விதிக்கப்படுகிறது. வழக்கு விசாரணை ஜனவரி 7ம் தேதிக்கு தள்ளிவைக்கப்படுகிறது. அப்போது, டியூட் பட தயாரிப்பு நிறுவனம் பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டார்.

தேர்தல் முடிவை பொறுத்தே

கூட்டணி ஆட்சியை முடிவு செய்ய முடியும்

அன்புமணி சொல்கிறார்

சென்னை, நவ.29: கூட்டணி ஆட்சியை பொறுத்தவரை தேர்தல் முடிவை பொறுத்து தான் முடிவு செய்ய முடியும் என அன்புமணி தெரிவித்தார்.

பாமக தலைவர் அன்புமணி, 'உரிமை மீட்க, தலைமுறை காக்க' என்ற தலைப்பில் கடந்த ஜூலை 25 முதல் நவம்பர் 9ம் தேதி வரை 108 நாட்கள் தமிழகம் முழுவதும் அரசியல் நடைபயணம் மேற்கொண்டார். இதுகுறித்த பத்திரிகையாளர் சந்திப்பு நிகழ்ச்சி சென்னையில் நேற்று நடந்தது. அதில் நடைபயணம் குறித்த குறும்படம் ஒளிபரப்பப்பட்டது. தொடர்ந்து, அவர் அளித்த பேட்டி:

தமிழகத்தில் 1.20 லட்சம் டன் கொள்முதல் செய்யப்படுகிறது. அதில் 3ல் ஒரு பங்குதான் அரசு செய்கிறது. உட்கட்டமைப்பை இன்னும் வலுப்படுத்த வேண்டும். திமுக அரசை அகற்றும் கூட்டணியில் பாமக நிச்சயமாக இடம் பெறும். கூட்டணி ஆட்சியை பொறுத்தவரை தேர்தல் முடிவை பொறுத்துதான் முடிவு செய்ய முடியும். வெளிநாட்டு தொழில் முதலீடுகள் சம்பந்தமாக ஆதாரங்களுடன் புத்தகம் வெளியிட்டுள்ளேன். இதை பொய் என சொல்லும் திமுகவினர் என்னுடன் விவாதம் செய்யலாம். இவ்வாறு கூறினார்.

டிசம்பர் 5ம் தேதி ஜெயலலிதா நினைவு நாள்

மலர்வளையம் வைத்து எடப்பாடி பழனிசாமி மரியாதை

சென்னை, நவ.29: அதிமுக தலைமை கழகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை:

ஜெயலலிதாவின் 9ம் ஆண்டு நினைவு நாள் டிசம்பர் 5ம் தேதி (வெள்ளி) ஆகும். அன்றைய தினம் காலை 10 மணிக்கு சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள ஜெயலலிதா நினைவிடத்தில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்த உள்ளார். இதையடுத்து உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது. மேலும் டிசம்பர் 5ம் தேதி ஆங்காங்கே ஜெயலலிதா உருவபடங்களை வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் அழைப்பு அறிவிப்பு

ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	பணியின் விவரம்
T.2351	மே.பொ / மி.தொ - II	Supply of 22 or 33 KV 800A DBCR AB Switches
E-08 / 25-26	த.பொ / மி.கூ.இ / சென்னை	Procurement of 110 kV straight joint OD termination and transition kit

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tantransco.gov.in, www.tenders.tn.gov.in, www.tntenders.gov.in/nicgep/app.
செ.ம.தொ.இ/6379/ஒப்பந்தப்புள்ளி/2025

மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) வரையறுக்கப்பட்டது
பல்லவன் இல்லம், அண்ணா சாலை, சென்னை - 600 002.
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை

மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் 9 எண்ணிக்கையிலான பல்வேறு கட்டுமானம் மற்றும் மின்னியல் பணிகளுக்கு தகுதி வாய்ந்த முன் அனுபவமுள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து e-Tender வலைத்தளத்தில் (https://tntenders.gov.in) ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பதிவிறக்கம் செய்யும் நேரமும், காலமும்	:	08.12.2025 முதல் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கும் இறுதி நேரம் வரை
ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் சமர்ப்பிக்க ஆரம்ப நாள்	:	10.12.2025 காலை 09.00 மணி முதல்
ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் சமர்ப்பிக்க இறுதி நாள்	:	06.01.2026 மதியம் 12.00 மணி வரை
ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கும் தேதியும், நேரமும்	:	06.01.2026 மாலை 15.15 மணி

ஒப்பந்தப்புள்ளி படிவம் அரசு இணையதளத்திலிருந்து (https://tntenders.gov.in) இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
மேற்படி ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளில் மாற்றம் ஏதேனும் இருப்பின் அவ்விவரம் மேற்படி இணையதள முகவரியில் வெளியிடப்படும். ஒப்பந்ததாரர்கள் மேற்படி இணையதள முகவரியில் விவரத்தை அவ்வப்போது பார்த்துக்கொள்ளலாம்.
விண்ணப்பபடிவங்களை / ஒப்பந்தப்புள்ளிகளை எவ்வித காரணமும் விளக்கமும் இன்றி ஏற்றுக்கொள்ளவோ / நிராகரிக்கவோ மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு முழு அதிகாரம் உண்டு.
செ.ம.தொ.இ/ 6381 / ஒப்பந்தப்புள்ளி / 2025
மேலாண் இயக்குநர்

திருவண்ணாமலை தீப விழாவில் மக்கள் பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை

சென்னை, நவ. 29: கார்த்திகை தீபத்தை முன்னிட்டு திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோயிலில் நெரிசலை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். போதுமான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று வழக்கறிஞர் யானை ராஜேந்திரன் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கில் தமிழக டிஜிபி, திருவண்ணாமலை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில், தீபத் திருவிழாவுக்காக 15 ஆயிரம் போலீசார் பாதுகாப்புப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். கிரிவல பாதையில் பக்தர்கள் துன்புறுத்தப்படுவதை தடுக்கவும், பணம் பறிப்பதை தடுக்கவும் சிறப்பு குழுக்கள் பணியமர்த்தப்பட்டுள்ளது என்று கூறப்பட்டிருந்தது.

இந்து சமய அறநிலையத் துறை மற்றும் மாநகராட்சி நிர்வாகம் உள்ளிட்ட துறைகளுடன் இணைந்து பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அறிக்கையில் விளக்கம் அளிக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிபதி பி.பி. பாலாஜி முன்பு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது,



மாவட்ட ஆட்சியர் தரப்பில் ஆஜரான சிறப்பு அரசு வழக்கறிஞர் அருண் நடராஜன் தாக்கல் செய்த அறிக்கையில், 20 துறைகளுடன் இணைந்து விரிவான பாதுகாப்பு மற்றும் மேலாண்மை திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. 2,325 பேருந்துகள் நிறுத்துவதற்காக 24 தற்காலிக பேருந்து நிறுத்தங்கள், 19,815 கார்கள் நிறுத்துவதற்காக 130 கார் பார்க்கிங் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அங்கு கழிவுநீர், குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள் ஏற்பட்டுத்தப்பட்டுள்ளது. தமிழக பக்தர்கள் வசதிக்காக 4,764 சிறப்பு பேருந்துகள், வெளி மாநில பக்தர்களுக்காக 520 பேருந்துகளும், 16 சிறப்பு ரயில்களும் இயக்கப்பட்டு வருகிறது.

கோயிலுக்குள் 303 கண்காணிப்பு கேமராக்கள் உள்பட 1,060 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. மருத்துவ வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தீபத்தையொட்டி பொதுமக்கள் பாதுகாப்பை உறுதி செய்யவும், விழா சுமுகமாக நடப்பதை உறுதி செய்யவும், மாவட்ட நிர்வாகம் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது என்று கூறப்பட்டிருந்தது. மாவட்ட கலெக்டர், காவல் துறை தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கைகளை ஏற்றுக்கொண்ட நீதிபதி, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை கண்டிப்புடன் பின்பற்ற வேண்டும் என்று உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தார்.

pnb Housing Finance Limited Ghar Ki Baat
பதிவு அலுவலகம்:-9ஆவது தளம், அந்தரிக்ஷ்பவன், 22, கே.ஜி. மார்க், புதுடெல்லி-110001 தொலைபேசிகள்:-011-23357171, 23357172, 23705414, இணையதளம்:www.pnbhousing.com கிளை முகவரி: RH_சென்னை-கிண்டி, C 45, முதல் தளம், திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை - 600032
சுவாதீன அறிவிப்பு (அசையாச் சொத்துக்களுக்கானது)

இவ்வறிரு்கக் கீழே கையொப்பமிட்டவர் **பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின்** அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கிறபடியால் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் கீழ் & கடனீட்டுச் சொத்து உரிமை அமலாக்கம் சட்டம், 2002 இன் விதி 8(1) உடன்பாட்டில், மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 3 உடன் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, ஒவ்வொரு கணக்குக்கு எதிரே குறிப்பிட்ட தேதியில் கோரிக்கை அறிவிப்புகள் வழங்கி சம்பந்தப்பட்ட கடன்தாரர்கள் ஒவ்வொரு கணக்குக்கு எதிரே குறிப்பிட்டவாறு தொகையை அறிவிப்பு (கள்) தேதி/மேற்கூறிய அறிவிப்பு/கள் கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார். கடன்தாரர்/கள் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளார். இதன்மூலம் கடன்தாரர்/கள் குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் வழங்கப்படும் அறிவிப்பாலது கீழே கையொப்பமிட்டவர் மேற்கூறிய விதிகளின் விதி 8 உடன் மேற்கூறியச் சட்டத்தின் பிரிவு 13(4) கீழ் அவருக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி இங்கே கீழே விவரிக்கப்பட்ட சொத்தினை/களை ஒவ்வொரு கணக்குக்கு எதிரே குறிப்பிட்ட தேதிகளில் சுவாதீனம் செய்துள்ளார். கடன்தாரர்/கள் குறிப்பாகவும் மேலும் பொதுமக்களுக்குப் பொதுவாகவும் இதன்மூலம் எச்சரிக்கப்படுவதாவது சொத்து/கள் உடன் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டாம். மேலும் சொத்து/கள் உடனான அனைத்து நடவடிக்கைகளும் தொகை மற்றும் கடன் ஒப்பந்தப்படி அதன் மீதான வட்டிக்காக, **பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின்** வசூலுக்கு உட்படும். கடனீட்டுச் சொத்துகளை மீட்பதற்கு, கால அவகாசம் கிடைக்கப்பெறுதல் குறித்த, சட்டத்தின் பிரிவு 13 இன் உட்-பிரிவு (8) விதிமுறைகள் கடன்தாரர்கள் கவனத்திற்கு கொண்டு வரப்படுகின்றன.

வ. எண்	கிளை	கடன் கணக்கு எண்(கள்)	கடன்தாரர்/ உப-கடன்தாரர்/ ஜாமீன்தாரர் / பெயர்	கோரிக்கை அறிவிப்பு நாள்	நிலுவைத்தொகை	சுவாதீனம் செய்த நாள்	அடமானச் சொத்து/கள் விவரம்
1	சென்னை	HOU/ CHE/0718/ 553470	திரு. சரவணன் E & திருமதி கவிதா சரவணன்	11.06.2025	09.06.2025 தேதியன்று ரூ.19,27,661/- (ரூபாய் பத்தொன்பது லட்சம் இருபத்தேழு ஆயிரத்து ஆறு நூற்று அறுபத்து ஒன்று மட்டும்)	25.11.2025 அடையாளப்பூர்வ சுவாதீனம்	"அட்டவணை-A அனைத்து துண்டுகள் மற்றும் பகுதி நிலம் மற்றும் கட்டிடம் அமைந்துள்ள கதவு எண் 10/3 ஏஜெண்ட் பெருமாள் தெரு, வார்டு A, பிளாக் எண் 30, காரை கிராமம், வாலாஜா தாலுகா, வேலூர் மாவட்டம், 765 சதுர அடி பழைய சர்வே எண். 603/14B1 மற்றும் புதிய டவுன் சர்வே எண்.33 இல் வாலாஜா சார்பதிவு மாவட்டம், அரக்கோணம் பதிவு மாவட்டம், (மற்றும் துணைப் பிரிவின்படி புதிய டவுன் சர்வே எண். 33/1) **எல்லைகளாவன: கிழக்கு:** கண்ணன் மனை, **மேற்கு:** கோபால் மனை, **வடக்கு:** ரமேஷ் மனை, **தெற்கு:** ஏஜெண்ட் பெருமாள் தெரு, கிழக்கு மேற்கு வடக்குப் பக்கம் 16 அடி, தெற்குப் பக்கம் 18 அடி, வடக்குத் தெற்காக 45 அடி. "765 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம்"

நாள்: 25.11.2025, இடம்: வேலூர்
ஒம்/-அதிகாரப்பூர்வ அதிகாரி, பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிட.

க்ரிஹும் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் GRIHUM HOUSING FINANCE LTD.
பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், பி பில்டிங், கங்கா ட்ரூனோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலகு: 2 தளம், பி-பிளாக், எண்.5, ஆர்ஜே பிளாசா, காட்பாடி பிரதான சாலை, பாலாறு பாலம் அருகில், விருதம்பட்டு, வேலூர்-632006.
மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8&9 கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப-கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹும் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் இதற்குப் பிறகு சட்டத்தின்படி **கடனீட்டு கடனீந்தோர்** என்று குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், சட்டத்தின் பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்துள்ளார்.
கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் 31.12.2025 நாளில் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என